(ஆ) ஏராளமான தொகை ஊழல் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) உறுப்பினர் பங்குத் தொகையினை திருப்பித்தர அரசு உத்திரவு போட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட்

(அ) பண்டகசாலை கலைக்கப்பட காரணங்கள் கீழ்வருமாறு;

(1) சங்கம் 5 ஆண்டுகளுக்கு மேலாக சரியான முறையில் செயல்படவில்லை.

(2) 30-6-1973 தேதி அன்று நட்டத்தில் இயங்கி வந்தது.

(3) 1973-74, 1974-75 ஆண்டுகளில் பண்டகசாலையின் நிர்வாகக் குழு கூடி நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை.

(4) சங்கத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுப் பண்டகசாலையில் ஏராளமான தவறுகள் நடைபெற்றதாக மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை உறுப்பினர்களுடைய பங்கீட்டுத் தொகை திரும்பக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட புகார்கள் இன்னும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை. பங்கீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான யோசனை இப்போது நிதிநிலையைப் பொருத்தமட்டில் இல்லை.

விவசாயக் கடன்களுக்கான வட்டி விகிதம்

*820 வினா திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) விவசாயக் காரியங்களுக்கு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி விதிக்கும் வட்டி விகிதம் என்ன?

(ஆ) விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய காலக் கடனுக்கும் மத்தியகாலக் கடனுக்கும் செலுத்தும் வட்டி விகிதம் என்ன?

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) 6 சதவீதம் குறுகிய காலக் கடனுக்கும், 6.50 சதவீதம் மத்திய காலக் கடனுக்கும் விதிக்கிறார்கள்.

(ஆ) உணவுப்பயிர் சாகுபடி செய்யும் சிறு விவசாயிகளுக்கு மட்டும் 10·5 சதவீதமும், அதே பயிரை சாகுபடி செய்யும் இதர விவசாயிகட்கும், இதரப் பயிர்கள் சாகுபடி செய்யும் எல்லா விவசாயிகளுக்கும் 12 சதவீதமும் குறுகியகாலக் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. மத்திய காலக் கடனுக்கு 12·5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்போது ரிசர்வ் வங்கி வட்டி வீதம் 6.5 சதவீதம். ஆனால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவது 12·6 சதவீதம் ஆகவே, இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் 6·1 ஆகிறது. தற்போது 3 அடுக்கு முறையில் கூட்டுறவு அமைப்புகள் இருப்பதால் தான் இந்தமாதிரியான அதிக அளவிற்கு வித்தியாசம் வருகிறது என்ற கருத்து தொடர்ந்து சொல்லப்படுகிறது. ஆகவே, இதை இரண்டு அடுக்காக மாற்றி, ரிசர்வ் வங்கி வட்டிக்கும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடன் வட்டிக்கும் உள்ள வித்தியாசம் 3 சதவீதம் ஆக இருக்கும் வகையில் மாற்றிச் செய்ய அரசு முன் வருமா? இப்போதே குறைக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அதை விட அதிகமாகக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடக்கும் நேரத்தில் 12·6 சதவீதம் என்று இருந்த வட்டியை உணவு உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளுக்கு 10 சதவீதம் என்று குறைத்து அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதற்கும் கீழே குறைப்பதற்கு, 3 டயர் சிஸ்டத்தை 2 டயர் சிஸ்டமாக மாற்றினால் முடியுமா என்று கேட்கிறார்கள். 3 டயர் சிஸ்டத்தை 2 டயர் சிஸ்டமாக மாற்றி அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் வழங்கப்பட்ட கடன் வசூல், 3 ஆண்டு காலமாக ஏற்பட்டு இருந்த கடும் வறட்சி காரணமாக தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட கடன்களுக்கு வட்டிகளை ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தள்ளிவைக்கப்பட்ட கடன்களுக்கு வட்டியை ரத்து செய்வதற்கு எந்த விதமான யோசனையும் அரசுக்கு இல்லை என்று பலமுறை இந்த மன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.